பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 15 புதன்கிழமை 31.07.2024 கதிர் 266

# ஆளும் தரப்பில் 92 எம்.பி.கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

## நேற்று ஒன்றுகூடி வெளிப்படுத்தினர்



இலங்கை ஆளும் தரப்பின் 92 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நேற்றுத் தமது ஆதரவைத் தெரிவித்தனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கப் போவதில்லை, தனியே ஒரு வேட்பாளரை நிறுத்தப் போகிறோம் என்று பொது ஜன பெரமுன திங்கட்கிழமை அறிவித்த கையோடு அந்தக் கட்சியின் பெரும்பான்மையான நாடாளுமன்ற உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாக ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் இந்தக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

பிரதமர் தினேஸ் குணவர்த்தனவும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தார். ☞ 2



# இது ரகசியம் அல்ல!

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிப்பதில்லை என்று ராஜபக்சக்கள் வெளிப்படையான ஒரு தீர்மானத்தை எடுத்திருப்பது அவர்களது கட்சிக்குள் இப்போது தெளிவானபிளவைஏற்படுத்தியுள்ளது.

திங்கட்கிழமை பகல் பெரமுனவின் அரசியல் குழு கூடி ரணிலை ஆதரிப்பதில்லை என்ற தீர்மானத்தை எடுத்தது. அன்றிரவே பெரமுன சார்பில் ஆளும் தரப்பில் அமைச்சர்களாக இருப்பவர்கள் கூடி ரணிலுக்கு ஆதரவான தமது அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் தீர்மானித்தனர்.

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலர் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் அதில் பங்கேற்றிருந்தார்.

கொழும்பு மல்பாறையில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தனவின் கட்சி காரியாலயத்தில் இவர்கள் ஒன்றுகூடிக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இதில், பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச, அமைச்சர் கஞ்சன விஜேசேகர, இராஜாங்க அமைச்சர்களான திலும் அமுனுகம, அனுப பஸ்குவல், கீதா குமாரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்தானந்த அளுத்கமகே, ☞ 2

# 9,436 சிறுவர் பாலியல் முறைகேடுகள்

2023ஆம் ஆண்டில் சிறுவர் மீதான பாலியல் முறைகேடுகள் தொடர்பில் 9,436 குற்றங்கள் பதிவாகியுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகாரி கீத் பிரேமரத்ன தெரிவித்தார்.

இணையவழி பாதுகாப்பு தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டுவதற்காக காலியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதிகளவான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ளன. கொழும்பு மாவட்டத்திலிருந்து 1,124, கம்பஹா மாவட்டத்திலிருந்து 907, களுத்துறை மாவட்டத்திலிருந்து 548 முறைகேடுகள் தொடர்பான முறைப்பாடுகளும் ☞ 2

# யாழ்ப்பாண தெரிவத்தாட்சி அலுவலராக பதில் மாவட்ட செயலரை ஏற்க முடியாது

## தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு சுமந்திரன் எம்.பி. அழுத்தம்

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலராகப் பதில் அரச அதிபர் பணியாற்றுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தேர்தல்கள் ஆணைக் குழுவின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணம் தேர்தல் மாவட் டத்திற்கு யாழ். மாவட்டச் செயலாளரே தெரிவத்தாட்சி அலுவலராக நியமிக்கப்படுவது வழமை. எனினும் தற்போது இரு மாவட்டங்களிற்கும் நிரந்த மாவட்டச் செயலர்கள் நியமிக்கப்படவில்லை. பதில் மாவட்டச் செயலர்களே பதவியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

மாவட்டச் செயலர்களை நியமிப் ☞ 2

# பொலிஸ் மா அதிபரை உடன் நியமிக்குமாறு கேட்டுக் கடிதம்

## தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதி செயலருக்கு அனுப்ப தீர்மானம்

பொலிஸ் மா அதிபர் அல்லது அவருக்குப் பதிலான ஒருவரை உடனடியாக நியமனம் செய்யுமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்புவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துளளது.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் கூட்டம் ராஜகிரியவில் உள்ள அதன் செயலகத்தில் நேற்று இடம்பெற்றபோது இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பிலான பல விடயங்கள் தொடர்பில் அந்தக் கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் தேர்தல் ஆணைக்குழு நேற்றே முதல் முறையாகக் கூடியது.

# பெருந்தொற்றுக்கால சுகாதார காப்பு நிலைக்கு திரும்புங்கள்

## மருத்துவ அதிகாரிகள் அறிவுறுத்து

கொரோனா பெருந்தொற்றுக் கால சுகாதார நடைமுறைகளுக்கு,பாதுகாப்பு முறைகளுக்குத் திரும்பும்படி சுகாதார அதிகாரிகள் பொது மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். இன்புளூவென்ஸா எனப்படும் நுண்தீமி (வைரஸ்) காய்ச்சலின் பரவல் அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாகக் குழந்தைகள், முதியவர்கள், நோயெதிர்ப்பு சக்தி குறைபாடுள்ளவர்கள் தற்போதைய ☞ 2

# வடக்கில் வியாபாரப் பதிவுகள் விரையில் இணையமூடாக

## நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் ஆளுநர்



வடக்குமாகாணத்தில் சிறுதொழில்முயற்சிகளில் ஈடுபடுவோர் தமது வியாபாரப்பதிவை விரைவில் இணையத்தளம் ஊடாகப் (Online Business Registration) பெறமுடியும் என்று வடக்குமாகாண ஆளுநர் தெரிவித்தார். அதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும் ☞ 2

# உண்மை, நல்லிணக்க செயலக புதிய இணையத்தளம் அறிமுகம்

உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின் (ISTRM) உத்தியோகப்பூர்வ இணையத்தளம் தொடங்கப்பட்டுள்ளது. இது தொடர்பான நிகழ்வு அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் தலைமையில் நடைபெற்றது.

இடைக்கால செயலகத்தின் முன்னேற்றம் குறித்து அக்கறை காட்டுவோருக்கான பிரதான தகவல் மூலமாக இந்த ☞ 8

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

எஸ்.பி. திஸாநாயக்க, பிரேம்நாத் சி.தொலவத்த உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க இவர்கள் தீர்மானித்தனர். அது மட்டுமல்ல, ஆளும் தரப்பில் இருந்துரணிலைஆதரிப்பவர்களின் பலத்தைவெளிப்படுத்தும்வகையில் நேற்று நடந்த கூட்டத்திற்கும் இந்தக் கூட்டத்திலேயே அத்திபாரம் போடப்பட்டது. அதன் அடிப்படையில்தான் 92 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுத் திரட்டப்பட்டனர்.

ஆளும்தரப்புக்குள் மட்டுமன்றி பெரமுனவின் அடிப்படைக் கட்டமைப்புக்குள்ளும் இப்போது பிளவு ஏற்பட்டு வருகின்றது. கட்சியின் அனுராதபுரக் கிளை, தமது கட்சித் தலைவர்களின் -முடிவை ஏற்பதில்லை என்று முடிவு செய்திருக்கின்றது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிப்பது என்று தமது கிளைக்குழு தீர்மானித்துள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேன தெரிவித்தார்.

ரணில் தன் வேலையைக் காட்டத் தொடங்கிவிட்டார்.

இந்த அண்மைய நகர்வுகள் மூலம் பெரமுனவுக்குள் பெருமளவிலான நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை ரணில் பெற்றுக்கொண்டாலும் நாடாளுமன்றத்தில் அவரது பெரும்பான்மைஇழக்கப்பட்டுள்ளது என்கிற விமர்சனங்கள் அதன் மூலம் கிளம்பியுள்ளன. ஜனாதிபதியாகும்போது அவருக்கு 134நாடாளுமன்றஉறுப்பினர்களின் ஆதரவு இருந்தது. இப்போது அது 92ஆகக் குறைந்துள்ளது. எதிர்க் கட்சிகளின் பரப்புரையில் அடுத்து வரும் நாட்களில் இது ஒரு முக்கிய விவகாரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ரணிலின் இந்த நகர்வால் ராஜபக்சக்களும் பெரமுனவின் எஞ்சியபகுதியினரும்கூடரணிலுக்கு எதிராகத்தீவிரமாகவேலைசெய்யும் நிலைமையும் ஏற்பட்டிருக்கின்றது. இந்த உள்மோதல்கள் ரணிலை எங்கு கொண்டுபோய் நிறுத்தும் என்பதும் ஒன்றரை மாதங்களில் தெரிந்துவிடும்.

இடிமின்னல்
(idiminnal@gmail.com)

## ஆளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்சக்களின் பெரும் ஆதரவாளர் எனக் கருதப்பட்ட அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியும் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

அராஜகமற்ற, வரிசையுகம் இல்லாத சமூக, அரசியல் ஸ்திரத்தன்மைமற்றும்பொருளாதார அபிவிருத்தியுடன் கூடிய நாட்டைக் கட்டியெழுப்ப கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே என்றும், அதனால் தனிப்பட்ட அரசியல் நோக்கங்களை விடுத்து நாட்டுக்காக தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய சூழல் உருவாகியுள்ளதாகவும் இந்தக் கூட்டத்திற்குவந்திருந்தநாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

தாம்கஷ்டப்பட்டுகட்டியெழுப்பிய கட்சியைப் பற்றி சிந்திக்காமல் ஒரு சிலரது கோரிக்கைக்கு அமைவாக எடுக்கப்பட்ட தீர்மானத்தை நிராகரித்துவிட்டுஸ்ரீலங்காபொதுஜன பெரமுனவைப்பிரதிநிதித்துவப்படுத்தி இந்தச் சந்திப்பில் தான் கலந்துகொண்டனர்என்றுஅந்தக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர் என்றும், முன்னாள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள் உட்பட கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்கள் தமது இந்தத் தீர்மானம் சரியானது என்பதை உறுதி செய்துள்ளனர் என்றும் தெரிவித்தனர்என்றுஜனாதிபதியின் ஊடகப் பிரிவு அறிக்கை கூறியது.

நாட்டின் பொருளாதாரம், சட்டம் ஒழுங்குசீர்குலைந்துநாடாளுமன்ற உறுப்பினர்கள்வீதியில்கொல்லப்பட்ட போது இரண்டு வருடங்களில் நாட்டை ஸ்திரப்படுத்துவ தற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாடுபட்டதையும் அவர்கள் நினைவுபடுத்தினர்என்றுஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

''2022ஆம் ஆண்டு நாடு பெரும் அரசியல், பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தபோது, நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை நான்ன் தனியாக ஏற்கவில்லை. நாட்டை நேசித்த திறமையானகுழுவினர்என்னுடன் இணைந்துகொண்டனர். அவர்கள் தமது பொறுப்பைச் சரியாக நிறைவேற்றினர். அந்தக் குழுவினராலேயே நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியும்.

நாட்டைக்கட்டியெழுப்ப எனக்கு ஆதரவளிக்குமாறு முதலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடமே கேட்டேன். அன்று அவர் சரியான தீர்மானத்தை எடுத்தார். அதற்கு நன்றி தெரிவிக்கின்றேன்"என்றுகூட்டத்தில் பேசிய ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அமைச்சர்களான அலி சப்ரி, ரமேஷ் பத்திரன, இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.பி. திஸாநாயக்க, எஸ்.எம்.சந்திரசேன, அனுரபிரியதர்சன யாப்பா, பிரியங்கர ஜயரத்ன, டி.பி. ஹேரத், மஹிந் தானந்த அளுத்கமகே, பிரேமநாத் சி.தொலவத்த, ஜானக வக்கும்புர, ஜோன் செனவிரத்ன, டக்ளஸ் தேவானந்தா, மதுர விதானகே, ராஜிகா விக்கிரமசிங்க உள்ளிட்ட பலரும் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

## வடக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் அவர் உறுதியளித்தார்.

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் மற்றும் ஆளுநர் ஆகியோரின் தலைமையில், ஆளுநர் செயலக கேட்போர் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில்அவர்இதனைத் தெரிவித்தார்.

சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோ ருக்கான வியாபார பதிவுகளை மேற்கொள் வதில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. கால தாமதமின்றி வியாபார பதிவுகளை முன்னெடுப்பதற்கு இணையதள பதிவு முறையை (Online Business Registration) அறிமுகப்படுத்துவது சிறந்த செயற்பாடுஎனதெரிவித்த ஆளுநர், வடக்கு மாகாணத் தில் அதற்கான செயற் பாட்டைத் துரிதகதியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் கூறினார்.

அத்துடன்பொதுச்சேவைக்கான செயற்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவதும் அவசியம் என்பதையும் அவர் இராஜாங்க அமைச்சருக்குச் சுட்டிக்காட்டினார்.

விசேட தேவையுடையோர் பொதுச் சேவைகளை இலகுவில் அணுகக்கூடிய வகையில் கட்டடங்கள் அமைக்கப்படுதல் வேண்டும்எனவும்,அவர்களுக்கான போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சர்அனுபபஸ்குவல்அவர்கள், போக்குவரத்திற்கான பஸ்களை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக கூறினார். அத்துடன் விசேட தேவையுடையோர் இலகுவாக அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்களை மேற்கொள்ளாத பொது நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளைகளின்பெற்றோர்'அசுவெசும' கொடுப்பனவைபெற்றுக்கொள்வதில் காணப்படும் இடையூறுகள் தொடர்பிலும் இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அதில் காணப் படும் சிக்கல்களை நிவர்த்திக்கவும் நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

## பெருந்தொற்றுக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரகாலநிலைதொடர்பில்மிகவும் அவதானமாக இருக்கவேண்டும் என்று குழந்தைகள் நல மருத்துவர் லக்குமார் பெர்னாண்டோ தெரிவித்தார்.

காய்ச்சல்பரவுவதைத்தடுப்பதற்கு கொரோனா பெருந்தொற்றின்போது பின்பற்றப்பட்ட முக்கியமான பாதுகாப்பு வழிகாட்டுதல்களை பொதுமக்கள் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம் என்று மருத்துவர் தெரிவித்தார்.

'குழந்தைகள் மற்றும் வயதானவர்கள் முகமூடிகளை அணியவேண்டும், சிறந்த கை சுகாதாரத்தை கடைபிடிக்க வேண்டும், குறிப்பாக பொது போக்குவரத்து மற்றும் சமூக கூட்டங்களில்உடல்இடைவெளியை பராமரிக்க வேண்டும்,' என்று அவர் தெரிவித்தார்.

'பாடசாலைகள், குழந்தைகள் பகல் பராமரிப்பு நிலையங்கள் ஆகியன காய்ச்சல் பரவுவதற்கான முதன்மையான இடங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் உடல் நிலையை உன்னிப்பாகக் கண்காணிக்கவேண்டும், ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் அவர்களைப்பாடசாலைகள்அல்லது பகல் பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்புவதைத்தவிர்க்கவேண்டும்' என்று மருத்துவர் பெர்னாண்டோ மேலும் கூறினார்.

காய்ச்சல், குளிர், தலைவலி, மூக்கு ஒழுகுதல் அல்லது அடைப்பு, தசை அல்லது உடல்வலி, குமட்டல், சோர்வு, பசியின்மை மற்றும் தொண்டை வலி ஆகியவை தற்போதைய இன்புளுவன்ஸா அலையின் அறிகுறிகளாகும்.

இன்புளுவன்ஸாநோயாளர்கள் பெருமளவில் அதிகரித்துள்ளனர் என்பதைஅரசமருத்துவஅதிகாரிகள் சங்கத்தின்(GMOA)ஊடகப்பேச்சாளர் மருத்துவர் சம்மில் விஜேசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

அதேநேரம் கொரோனா தொற்றுப் பரவலில் தற்போது சிறிய அதிகரிப்பு உள்ளதாகவும் அவர்களில் சிலர் இறந்துள்ளனர் என்றும் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் தடுப்பூசி போடாதவர்கள் என்றும் அவர் தெரிவித்தார். பிசிஆர் சோதனையில் கொரோனா அடையாளப்படுத்தப்பட்டாலும் அவற்றில் சில இறப்புக்களுக்கு கொவிட் - 19 நேரடிக் காரணமாக இருக்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொவிட் பரவல் ஆபத்தான விகிதத்தில் பதிவாகவில்லை என்பதால், மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றும் அவர் வலியுறுத்தினார்.

## யாழ்ப்பாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதற்கான இலங்கை நிர்வாக சேவையின் சிறப்புத் தரநிலையைச் சேர்ந்த 7 பேர் வடக்கு மாகாணத்தில் இருக்கின்றபோதும் அவர்களில் எவருக்கும் மாவட்டச் செயலர் பதவிகளை வழங்காமல், அரசியல் தேவைகளுக்காக இரு மாவட்டங்களுக்கும் நிர்வாக சேவைத்தரநிலைஒன்றில்இருக்கும் இருவருக்கு பதில் மாவட்டச்செயலர் பதவி வழங்கப்பட்டுள்ளது என்பதை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குச் சுட்டிக்காட்டியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், இத்தகைய நிலையில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திற்கு பதில் மாவட்டச் செயலரை தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலராகநியமிப்பதுஏற்புடையது அல்லஎன்பதையும்சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி இரு மாவட்டங்களிலும் மாவட்ட செயலாளர்கள் அரசியல் நியமனம் என்பதால் அவர்களில் ஒருவரை தெரிவத்தாட்சி அலுவலராக நியமிப்பது தேர்தலின்போது தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், நிர்வாகத் தர நிலை ஒன்றில் இருப்பவரைத் தெரிவத்தாட்சி அலுவலராக நியமித்தால் மாவட்டத்தில் உள்ள சிறப்புத் தர நிலைஅதிகாரிகளின்முழுமையான, முறையான ஒத்துழைப்பை தேர்தலுக்குப்பெறுவதிலும்நெருக்கடி ஏற்படும்என்றும்சுமந்திரன்மேலும் இடித்துரைத்துள்ளார்.

இவற்றைக் கருத்தில்கொண்டு யாழ். மாவட்டத்துக்கான தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலராக நிர்வாக சேவை விசேடதரத்தைச்சேர்ந்த ஓர் அதிகாரியையே நியமிக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளார்.



# மடு அன்னையின் ஆவணித் திருவிழாவுக்கான முன்னாயத்த நடவடிக்கைகள் குறித்து ஆராய்வு







மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாத திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15 ஆம் திகதி விசேட திருவிழாவாக இடம்பெற உள்ளது.

இந்த நிலையில் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழாவுக்கான முன் ஆயத்த கலந்துரையாடல் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் பங்குபற்றுதலுடன் திங்கட்கிழமை மாலை மன்னார் மாவட்டசெயலகத்தில் இடம் பெற்றது.

வருடாவருடம் மடு அன்னையின் ஆவணித்திருவிழாவில் கலந்து கொள்ள நாட்டின் பல பாகங்களில் இருந்தும் புலம்பெயர் நாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வது வழமை.

இந்த நிலையில் வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட வேண்டிய சகலவிதமான ஏற்பாடுகள் குறித்தும் அழைக்கப்பட்ட திணைக்களங்களுடன் கலந்துரையாடப்பட்டது.



வருகை தரும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சுகாதாரம், போக்குவரத்து, மருத்துவ வசதிகள், நீர் விநியோகம், உணவு விநியோகம் உள்ளிட்டவை குறித்து ஆராயப்பட்டது.

மேலும் சட்டம் ஒழுங்கை பின்பற்றும் வகையில் முப்படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்வரும் 06 ஆம் மருத மடு அன்னையின் ஆவணி மாத திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நவநாள் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு, 15 ஆம் திகதி திருவிழா திருப்பலி கூட்டுத்திரு பலியாக ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற குறித்த முன்னாயத்த கலந்துரையாடலில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மடுதிருத்தலபரிபாலகர் அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், இராணுவம், பொலிஸ் கடற்படை அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், வைத்தியர்கள், மற்றும் அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர். (05)



# குழந்தையை பிரசவித்த இளம் தாய் உயிரிழப்பு

## மன்னாரில் துயரம்

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, தம்பனைக்குளம் பகுதியைச் சேர்ந்த பட்டதாரியான இளம் தாய் ஒருவர் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மரணமடைந்த இளம் தாய் 27 வயதுடையவர் எனவும் இவர் பட்டப்படிப்பை நிறைவு செய்தவர் எனவும் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருகையில் -

இறந்த இளம் தாய்க்கு முதலாவது ஆண் குழந்தை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடந்த 09 ஆம் திகதி பிறந்துள்ளது. 11 ஆம் திகதி மருத்துவமனையில் இருந்து தாய் சேய் நலமாக வெளியேறியுள்ளார்கள்.

7 நாள்களின் பின்னர் முருங்கன் வைத்தியசாலையில் தையல் வெட்டுமாறு கூறியதையடுத்து கடந்த 16 ஆம் திகதி முருங்கன் வைத்தியசாலையில் தையல் வெட்டப்பட்டதாக இறந்த பெண்ணின் தாயார் தெரிவித்தார்.

தனது மகளை அவரே மருத்துவமனையில் வைத்து பராமரித்து வந்துள்ளார்.

அதன் பின்னர் கடந்த சனிக்கிழமை தாய்க்கு குருதிப் பெருக்கு ஏற்பட்டதை அடுத்து அன்று இரவு நோயாளர் அம்புலன்ஸ்மூலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு சென்று ஓ.பி.டி. பதிவுகளின் பின்னர் உரிய நோயாளர் விடுதியில் சேர்க்கப்பட்டார்.

குருதி ஒட்டம் கட்டுப்படாமல் எதேர்ச்சியாக கசிந்து கொண்டே இருந்ததன் காரணத்தால் விடிய காலை ஆறு முதல் ஏழு மணி அளவில் சுய நினைவை அவர் இழந்தார் எனத் தாயார் தெரிவித்தார்.

அதன்பின் அவசர சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்ட போது நண்பகல் 11 மணியின் பின்னர் இளம் தாய் மரணித்து விட்டதாக செய்தி எமக்குக் கிடைத்தது.

குருதிப் பெருக்குக் காரணமாக மருத்துவமனைக்கு கொண்டு சென்ற அன்று இரவு வைத்தியர்கள் பார்வையிட்டு இருந்தால் தனது மகளை காப்பாற்றியிருக்கலாம் என இந்த பெண்ணின் தாய் கண்ணீர் மல்க தெரிவித்தார்.

இறந்த இளம் தாய் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவுசெய்த போதும் பட்டமளிப்பு நிகழ்வு இன்னும் நடைபெறவில்லை. குறித்த பட்டமளிப்பு நிகழ்வு இன்னும் ஒரு சில மாதங்களில் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறு சோக சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கனவுகளோடு படித்து திருமண வாழ்க்கைக்குள் நுழைந்து உயிரிழந்த இளம் தாய் இனி உயிருடன் மீளப் போவதில்லை. ஆனால் இறுதி நேரத்தில் கூடவே இருந்து பராமரித்து வந்தவரும் இறந்த பெண்ணின் தாயுமானவர் தெரிவித்த குற்றச்சாட்டில் ஏதேனும் உண்மை இருக்கிறதா? என்று நீதியான விசாரணை செய்து உண்மைத் தன்மையை வெளிப்படுத்த சுகாதாரத் துறையினர் முன்வர வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் வினவிய போது -

பெண்ணின் மரணம் தொடர்பாக விசேட சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனை திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

அதிக குருதிப் பெருக்கு காரணமாக மரணம் நிகழ்ந்துள்ளதாகவும், மேலதிக பரிசோதனைகளுக்காக உடற்பாகங்கள் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பரிசோதனை அறிக்கை வெளிவந்தால் மரணத்திற்கான காரணத்தை முழுமையாக அறிய முடியும். எப்படி இருந்தாலும் வைத்தியசாலை தரப்பினர்மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.(05)

# போதைபொருள் நுகர்ந்த நால்வர் கைது நிறமூட்டும் தொழிற்சாலையில் சம்பவம்

நிறமூட்டும் தொழிற்சாலையில் ஐஸ் போதைப் பொருள்களை நுகர்ந்த 4 சந்தேக நபர்களை கைதுசெய்த பெரிய நீலாவணை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.


அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை பகுதியிலுள்ள நிறமூட்டும் தொழிற்சாலையில் நீண்டகாலமாக போதைப்பொருள் பாவனை நடைபெற்று வருவதாக பொலிஸாருக்கு திங்கட்கிழமை இரவு இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப் பெற்றிருந்தது.

இதற்கமைய செயற்பட்ட பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜே.எஸ்.கே.வீரசிங்க தலைமையிலான பொலிஸார் அங்கு சென்று சோதனை மேற்கொண்டதுடன் ஐஸ் போதைப்பொருளை நுகர்ந்த 4 சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

மேலும், கைது செய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்கள் 20, 18, 17, 17, வயது மதிக்கத்தக்கவர்கள் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து மீட்கப்பட்ட போதைப் பொருட்கள் சட்ட நடவடிக்கைக்காக நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்காக நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (05)

# பெரு மரமொன்று முறிந்து வீழ்ந்ததில் ஒருவர் காயம்







கண்டி, தெல்தெனிய பிரதேசத்தில் வங்கி ஒன்றிற்கு முன்பாக இருந்த பாரிய மரமொன்று முறிந்துவீழ்ந்ததில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் திங்கட்கிழமை பிற்பகல் இடம் பெற் றுள்ளது.

இதன்போது வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு ஓட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றிற்கு சேதம் ஏற்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பெரும்பான்மை ஆதரவை இழந்துள்ள அரசுத் தலைவர்

வரவிருக்கும் அரசுத் தலைவர் தேர்தலில் தற்போதைய அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்த தம்மை அர்ப்பணிப்பதாக 92 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அறிவித்துள்ளனர். ஆளும் தரப்பு உறுப்பினர்களின் கூட்டத்தில் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக அரசுத் தலைவர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

1981 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க ஜனாதிபதி தேர்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின்படி, 2022 ஜூலை 20 அன்று பதில் அரசுத் தலைவராகவும் தலைமை அமைச்சராகவும் (பிரதமர்) பதவியிலிருந்த ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்று அதிகாரமுடைய அரசுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க ஆகியோர் அவரை எதிர்த்துப் போட்டியிட்டிருந்தனர். வாக்கெடுப்பு 2022 ஜூலை 20 அன்று நாடாளுமன்றத்தில் நடத்தப்பட்டது, அதில் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளையும் டலஸ் அழகப்பெரும 82 வாக்குகளையும் பெற்றார். அனுரகுமார திஸாநாயக்க 3 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

அரசுத் தலைவர் கோட்டாபயவின் எஞ்சிய பதவிக் காலத்திற்குத் தெரிவு செய்யப்படுவதற்கு, ஒரு வேட்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர்களின் 50%க்கும் அதிக வாக்குகளைப் பெறவேண்டும், ரணில் விக்கிரமசிங்க அந்த வாக்குகளைப் பெற்றிருந்தார். 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் அன்று செல்லுபடியாக்கூடிய வாக்குகளின் எண்ணிக்கை 219. அதில் ரணில் விக்கிரமசிங்க 134 வாக்குகளைப் பெற்றிருந்தார். அன்றைய தினம் பதிவான வாக்குகளின் எண்ணிக்கை 223. இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பில் இருந்து விலகினர். 4 வாக்குகள் நிராகரிக்கப்பட்ட வாக்குகளாக அறிவிக்கப்பட்டன.

இந்தப் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் இலங்கையின் எட்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசுத் தலைவராக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார் என நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க தசநாயக்க நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இதன் மூலம், முன்னாள் அரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் இராஜினாமாவால் வெற்றிடமாகி இருந்த அரசுத் தலைவர் பதவியின் எஞ்சிய காலப்பகுதிக்கு ரணில் விக்ரமசிங்க தகுதி பெற்றுள்ளார் என நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. அத்தகைய நிலையில் நேற்றைய ஆளும் தரப்புக் கூட்டத்தில் நாடாளுமன்றத்தின் அரைவாசி உறுப்பினர்களிலும் குறைவானவர்களே அரசுத் தலைவருக்கு ஆதரவாகத் தற்போதுள்ளனர் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசுத் தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த ஆதரவு இழப்பு பெரிய மாற்றங்களை அரசியல் களத்தில் உடனடியாக ஏற்படுத்தப்போவதில்லை என்றாலும், பதவியின் முடிவுக் காலத்தில் – இரண்டு ஆண்டு காலப்பகுதிக்குள்ளேயே – ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தின் ஆதரவை இழந்திருக்கின்றார் என்பது கவனிப்புக்குரியது. தேர்தல் களத்திலும் இதன் பாதிப்பு உணரப்படும். விரைவில் அதன் விளைவுகளை அவர் அனுபவிக்க வேண்டியவராக இருப்பார்.

# பிள்ளையின் சகபாடிகளின் உறவு; கட்டமைக்க வேண்டியதா? கட்டுப்படுத்த வேண்டியதா?



சுபாகரன் சதீஸ்

ஒன்றாகப் பள்ளி சென்று வீடு திரும்பி, மாலையில் ஒன்றுகூடி விளையாடி மகிழ்ந்திருந்த சகபாடி சூழல் நம் தலைமுறையோடு முடிவு கண்டு விட்டது. கல்வியின் அடிப்படை தனிமனித நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் அந்நடத்தை ஒரு சமூக வெளிப்பாடாகவே அமைய வேண்டும். ஆனால் இன்றைய நம் கல்வி முறைமை எந்த அளவிற்கு சமூகமய தலைமுறையொன்றை உருவாக்குகிறதா?

பெற்றோர், குடும்பம், ஆசிரியர், பாடசாலை என்ற கட்டமைப்பை கடந்து பிள்ளைகளை சமூக மயப்படுத்துவதில் சம வயது சகபாடிகளின் பங்கு பெருந்திரளானது என்பதே உண்மை. சிறந்த சித்திகளைப் பெற்று உயர் பட்டம் பெற்றவர் சக மனிதர்கள், சக இனத்தவர், கலாச்சாரத்தவரை மதிக்க தவறி சுயநல நோக்கோடு செயல்படுவாரெனில் அவர் பெற்ற கல்வியின் பூரண தன்மை கேள்விக்கிடமாகின்றது.

சிறந்த சமூக நடத்தை, ஆற்றல், பற்று உள்ள ஒருவர் கல்விக் கட்டமைப்பில் சரிவர சித்தி பெற தவறுகிறான் எனில் அங்கு அவருக்கு வழங்கப்பட்ட கல்வியே கேள்விக்கிடமாகின்றது. இந்த சமூகமயமாக்கல் மற்றும் கல்வி சமநிலையின்மையே நம் நாட்டு அனேகமான பிரச்சினைகளுக்கு அடிப்படையாக உள்ளது.

குண்டுச்சட்டியில் குதிரை ஓட்டும் கல்வி முறையில் ஆளுமை, திறமை என்பவற்றை கொண்ட சமூகத்தை காட்டிலும் பந்தய குதிரைகளே பழக்கப்படுத்தப்படுகின்றனர். பந்தயத்தில் தோற்றுப் போகும் குதிரைகளைவிட இடையில் வழிதடுமாறி இடை நின்ற குதிரைகளே அதிகம் என்பதே இங்குள்ள துரதிர்ஷ்டம்.

''தனிநபர்கள் தான் சார்ந்த சமூகத்தின் கலாச்சாரத்தைகற்றறிந்துகொள்கின்றசெயல்முறையே சமூகமயமாக்கல். சமூகமயமாக்களுக்கு உட்படுத்தப்படாத எவரும் அவர் வாழுகின்ற சமூகம் விதித்த நியமனங்களுக்கு ஏற்ப இயல்பான மனிதராக கருதப்படமாட்டார்" என்கிறார் ஜூழிஷெழியிழிதுணுலிவி & ஜூலியிணுலிஷஜ (1990) என்னும் அறிஞர்.

நாம் பெற்று வளர்க்கும் நம் பிள்ளைகளை சமூகமயமாக்கம் செய்வதில் குறிப்பிட்ட வயதிற்கு மேல் நம்மை காட்டிலும் சம வயது சக பாடிகளினது பங்கு அதிகமானது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னிருந்த சகபாடி சூழலும் தற்போதுள்ள சகபாடி சூழலும் முற்றிலும் வேறுபட்டது. இது தொடர்பாக போதுமான விளக்கம் இன்மையினாலேயே இன்றைய பெற்றோர்கள் பிள்ளைகளின் சம வயது சகபாடி உறவிற்கு முட்டுக்கட்டையாக செயல்படுகின்றனர்.

இங்கே நம் பாடசாலை பிள்ளைகளை நான் ஒரு தொகுதிகளில் வைத்து பார்க்க விரும்புகிறேன். ஒன்று சுதந்திர செயல்பாடுடைய, பெற்றோரின் மிதமிஞ்சிய கட்டுப்பாட்டிற்கு உட்படாத பிள்ளைகள். மற்றொன்று பெற்றோரின் கடும் கண்காணிப்பில் மிதமிஞ்சிய அரவணைப்பில் வளரும் பிள்ளைகள்.

இதில் இரண்டாம் வகைப்பிள்ளைகள் கற்றல் செயல்பாடுகளில் சிறப்பாக செயல்பட்டாலும் சமூகம் சார் புரிதல் இன்றி பிற்காலத்தில் சமூகத்திற்கு முகம் கொடுக்கச் சிரமப்படுவதை காண முடிகிறது.

நம் பிள்ளைகள் சம வயது சகபாடிகளை சந்திக்கும் பிரதான இடம் பாடசாலை ஆகும். ஆனால் அங்கு பொதுவான உடை, நடத்தை, ஒழுக்கம் என ஒரு கட்டுப்பாடு பேணப்பட்டாலும்கூட தற்கால நடைமுறையில் பிள்ளைகள் பிரத்தியேக வகுப்புகள், தான் சார்ந்த சமூகம், ஊடகங்கள் என பரந்த அளவில் சகபாடிகளின் உறவை கட்டமைத்து கொள்கின்றனர். குறிப்பிட்ட வயதுக்குமேல் பிள்ளைகள் பெற்றோர், சகோதரர், ஆசிரியர்களை காட்டிலும் சம வயது சக பாடிகளிலேயே அதிக நம்பிக்கை கொள்கின்றனர். காரணம் தாம் சார்ந்த ஒத்த சிந்தனை, ஒத்த செயல்பாடு, எதிர்பார்ப்பு, விருப்பு வெறுப்பு, ஆர்வங்கள், நடத்தை என்பன சம வயது சதபாடிகளிடமே சரளமாக கிடைத்தலாகும். அதீத சுதந்திர உணர்வு, கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்படாமை, புதுமைநாட்டம் போன்ற மனநிலைகள் கட்டிளைமைப் பருவ மாணவர்களின் பொதுவான இயல்பாகும்.



இதற்கு சமவயது சதபாடிகளின் கூட்டுணர்வு பக்கபலம் சேர்க்கின்றது.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்நிலையினை கையாள்வதில் நடைமுறை சிக்கல்களைச் சந்திக்கின்றனர். அதீத கட்டுப்பாடுகளை விதித்து யாருடனும் பழகவிடாமல் கற்றல் செயல்பாடுகளுக்கு மட்டும் பிள்ளைகளை மட்டுப்படுத்தியும், அதேவேளை கண்காணிப்பற்ற சுதந்திரத்தை வழங்கி தவறான வழிகளில் பிள்ளைகள் செல்வதையும் அவதானிக்காத அலட்சியமான போக்கினையும் நம் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் கொண்டிருப்பதால் பொதுக் கண்ணோட்டத்தில் பார்க்கையில் நம் மாணவ சமுதாயத்திற்கு சம வயது சசபாடிகளின் உறவு என்பது எதிர்மறையானதாகத் தென்படலாம். ஆனால் இது சற்று நுணுக்கமாக ஆராயப்பட வேண்டிய ஒன்றாகும்.

தனித்திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், சாதனைகளை படைக்கவும், சமூக உணர்வு, ஒற்றுமை, தேசப்பற்று, சக சமூகங்களை இனங்காணல், சமூக பேதங்களைக் கடந்து நட்பு, உறவு, நம்பிக்கை போன்ற நிலைகளை அடைவதற்கு சம வயது சகபாடிகளின் உறவு ஒவ்வொரு பிள்ளைக்கும் அத்தியாவசியமானது. யாருடனும் பழகாது தனித்துவிடப்பட்ட ஒரு மாணவன் கற்றல்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

# பிள்ளையின் சகபாடிகளின் உறவு: கட்டமைக்க வேண்டியதா? கட்டுப்படுத்த வேண்டியதா?



நடவடிக்கைகளில் சிறப்பாக செயல்படுவான் ஆயினும் மாணவனின் உளவியல் நிலை குறித்து ஆராயுமிடத்து சிறந்த சமூகமயமாக்கப்பட்ட மாணவனாக அம்மாணவன் இல்லை என்பது புலப்படும்.

சகபாடிகளின் இன்றைய உறவாடல் நிலை முற்றிலும் மாறுபட்டுவிட்டது. வட்ஸ்அப் குழுமங்களுக்கும், முகப்புத்தக பதிவுகளுக்கும், ரிட்டொக்ரீல்ஸ்என இன்றைய மாணவர்களின் நட்பு வட்டாரம் துரிதமாகிவிட்டது. நம் மாணவர்களின் உடை அலங்காரம், தலைமுடி வெட்டுதல், தன்னை மற்றவர் முன்னிலையில் முன்னிறுத்துதல், மொழிநடை, சிந்தனை, மனப்பாங்கு, மற்றவரை அணுகும்முறை, சமூக செயல்பாடுகள் என அனைத்தையும் சமவயது சகபாடிகளே தீர்மானிக்கின்றனர்.

நடைமுறையில் வளர்ந்துவிட்ட ஊடக கலாசாரம், சமூக வலைதள பாவனை, பிரத்தியேக வகுப்பு கலாசாரம் என்பன நகர்புற மாணவ சமூகங்களை அதிகமாகப் பாதித்துள்ளன. அண்மைக் காலமாக நாம் கேள்விப்படும் சில சம்பவங்களை சிந்தித்து பார்ப்போம். மாணவரை கண்டித்த ஆசிரியரை மாணவர் தாக்கியமை, பள்ளி இறுதி நாளில் பாடசாலை பொருட்களை சேதப்படுத்தியமை, அவ்வப்போது சமூக வலைத்தளங்களில் உலா வரும் பாடசாலை மாணவர்களின் சீர்கேடான காணொளிகள், தொலைபேசி மறுக்கப்பட்டமைக்காகத் தற்கொலை செய்து கொள்ளுதல், காதல் தோல்வி மற்றும் மன அழுத்தம் போன்ற வயதுக்கு ஒவ்வாத காரணங்களுக்காக தற்கொலை செய்து கொள்ளுதல், சமூகவிரோத செயல்பாடுகளில் ஈடுபடுதல், போதை பொருளுக்கு அடிமையாகுதல் மற்றும் போதை பொருள் பாவனை, வாழ்க்கை சூழலுக்கு பொருத்தமற்ற உடல் அலங்காரங்களை செய்து கொள்ளுதல், எதிர்காலம், எதிர்கால தொழில் இலட்சியம் போன்ற குறிக்கோள்கள் அற்று நடைமுறை சார்ந்த விருப்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுதல் போன்ற பல்வேறு விடயங்களை வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம். இதற்கும் சம வயது சகபாடிகளின் பங்கு அல்லது போக்கு மிக மிக அடிப்படையாக அமைகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சமூக விரோத செயல்பாடுகள், போதைப்பொருள் பாவனை போன்றன மாணவர்களிடையே கடத்தப்படுவதில் சம வயது குழுக்களின் பங்கு அதிகம். இதற்கு சமூக விரோதிகளின் செயல்பாடுகள் அடிப்படையாய் அமைந்தாலும் மாணவர் சமூகத்தில் பரவுவதில் சமவயது குழுக்களின் பங்கு அதிகமானது. இதற்கு சமவயது மாணவர்கள் இவ்வாறான பிழையான விடயங்கள் மீது கொண்டுள்ள பிரிய மனப்பாங்கு காரணம் எனலாம்.

அண்மையில் பிரபல சிங்களமொழி எழுத்தாளர் ஒருவர நம் பிள்ளைகளின் ஒழுக்கத்தை தெரிந்து கொள்ள வேண்டுமெனில் பாடசாலை விட்டபிறகு பஸ்தரிப்பிடங்களுக்கு வந்து பாருங்கள் என தெரிவித்து இருந்தார். பாடசாலைகளை குறி வைத்துள்ள போதைப்பொருள், சமூக விரோத குற்ற செயல்களை தடுக்கவும் மாணவர்களைச் சமூகப்பற்றுள்ள ஒழுக்க விழுமிய நோக்குடைய பொறுப்புள்ள பிரஜைகளாக மாற்ற வேண்டும் எனில் சில உபாயங்களை நம் பெற்றோர்களும் பாடசாலை கட்டமைப்பும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சமவயது சகபாடிகளின் உறவு நிலைகளை தடுப்பதால் தீர்வு இல்லை. சிறந்த நண்பர் வட்டாரத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ள பிள்ளைகளை வழிப்படுத்த வேண்டுமே அன்றி நண்பர்களை நாமே தேர்ந்தெடுத்து கொடுக்கக்கூடாது. நண்பர்களுக்கிடையில் உள்ள நட்புநிலையில்வெளிப்படைதன்மையைபேணும் வகையில் பிள்ளைகளிடையே நம்பிக்கையே வளர்த்துக் கொள்ள வேண்டும். கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் ஆசிரியர்களும் பாடசாலையும் சகபாடி கற்றல் உத்திகளைக் கையாளவேண்டும்

நடைமுறை சார்ந்த பிரச்சினைகளைக் கருத்தில்கொண்டு கலைத்திட்டம் மற்றும் கற்றல் செயற்பாடுகளில் மாணவர்களுக்கு எதிர்காலம் குறித்த சிறந்த நோக்கு, ஒழுக்க விழுமியுங்கள், குறிப்பாக பாலியல் கல்வி, பொழுதுபோக்கு மற்றும் அழகியல் சார்ந்த கல்வி, தேசிய பற்று மற்றும் ஒற்றுமை போன்ற கருத்தமைவுகளை கொண்ட கல்வி முறைகளை செயல்படுத்த வேண்டும். அன்றி முன்பு குறிப்பிட்டது போல் பரீட்சையினை நோக்கமாகக் கொண்டு ஓட்டம் போடும் மாணவ சமூகத்தை பின்னின்று துரத்தும் கல்வி முறையாக தொடர்ந்து நீடிக்குமாயின் கல்வி - சமூகமயமாக்கல் என்ற இரு கருத்தாடல்கள் இடையிலான ஒரு பெரும் இடைவெளி நம் மாணவ சமூகத்தில் வெளிப்படும்.

மாணவப் பருவம் என்பது வாழ்வில் வண்ணமிகு பருவமாகும். இதில் முக்கிய வர்ணாங்கள் நட்பு நிலையிலேயே தங்கியுள்ளன. அதனை வாழ்விற்கு சாதகமாக மாற்றும் திறமை அனைத்து பிள்ளைகளிடமும் உண்டு என்பதே எனது நம்பிக்கை. அதற்குத் தகுந்த வழிகாட்டல்களை நம் பெற்றோர்களும் பாடசாலைகளும் வழங்கினாலே போதுமானது. இல்லையேல் கற்ற சமூகம் சமூக பொறுப்பின்றி சுயநலப் போக்கினையும், சமூகமயமாக்கம் பெற்ற சமூகம் கல்வியில் சிறக்க வழி இன்றி தவிப்பதனையும் என்ற இரு நிலைப்பட்ட பேதம் நம் சமூகத்தை தொடர்ந்தும் தேக்க நிலையிலே வைத்திருக்கும்.

(கட்டுரையாளர் கிழக்கு பல்கலை 4ம் வருட மாணவன்)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpoes Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# தேரரின் கைத்தொலைபேசி 'சிம்'மை திருடி பண மோசடி

பதுளையிலுள்ளவிகாரையொன்றிற்கு தொலைபேசி நிறுவனமொன்றின் பணியாளர்கள் என கூறிக்கொண்டு வருகை தந்த இரு இளைஞர்கள் தேரர் ஒருவரின் கைத்தொலைபேசியில்உள்ளசிம் அட்டையை திருடி தேரரின் வங்கி கணக்கில்இருந்துஆறரைலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளார் எனப் பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

தேரரின்கைத்தொலைபேசிக்கு அண்மையில் வங்கியொன்றின் பெயரில் தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளதுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதில் வங்கி கணக்கு தொடர்பான உயர்த்தப்பட்ட வற் கட்டணத்தை குறைக்க அரசு உத்தரவு வழங்கியுள்ளதால், வங்கி கணக்குகளின் விவரங்களை வழங்குமாறு கேட்டுள்ளனர். அப்போது தேரர் தனது வங்கி கணக்குகளின் விவரங்களை அவர்களிடம் வழங்கியுள்ளார் .

பின்னர், சில நாள்கள் கழித்து விகாரைக்குவந்த இனந்தெரியாத இரு இளைஞர்கள் கைத்தொலைபேசியில் ஏதேனும் பிரச்சினையா என்று தேரரிடம் கேட்டுள்ளனர்.

அப்போது தொலைபேசியில் அழைப்புவிடுக்கும்போதெல்லாம் வித்தியாசமானசத்தம் கேட்கிறது என கூறி அந்த இளைஞர்களிடம் தேரர் தொலைபேசியை கொடுத்துள்ளார் .

அதற்கமைய தொலைபேசியை சரி செய்து கொண்டிருந்த இரு இளைஞர்களும்தங்களது தொலைபேசி நிறுவனத்திற்கு குறுஞ்செய்தி ஒன்று அனுப்ப வேண்டும் என கூறி தொலைபேசியை பெற்று பின்னர் தேரரிடம் அதை மீள கொடுத்து விட்டு விகாரையை விட்டு வெளியேறி சென்றுள்ளனர் .

சிறிது நேரம் கழித்து குறித்த தேரர் அழைப்பொன்றை எடுக்க முயன்றபோது, தொலைபேசி வேலை செய்யாததால் சோதனையிட்டு பார்த்த போது, சிம் அட்டை இல்லாததை அவதானித்துள்ளார்.

சந்தேக நபர்கள் தனது சிம் அட்டையை மோசடி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தலாம் என சந்தேகித்த தேரர் தனது வங்கிக் கணக்குகளை தற்காலிகமாக செயலிழக்கச் செய்வதற்காக வங்கிக்குச் சென்றுள்ளார்.

அப்போது, அவரது வங்கி கணக்கில் இருந்து அண்மையில் ஆறரை லட்சம் ரூபா பணம் எடுக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அதனையடுத்து, குறித்த தேரர் இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

திருடப்பட்ட சிம் அட்டை மற்றும் வங்கி கணக்கின் விவரங்களை பயன்படுத்தி இந்த பணத்தை எடுத்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தேரர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டு வருகிறார் எனவும் அவரின் சத்திரசிகிச்சைக்காக இந்தப் பணத்தைசேமித்துவைத்திருந்தார் எனவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை கைது செய்வதுதொடர்பில்பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

(05)

# விமானப் பணிப்பெண்ணின் கையை பிடித்து தகாத வார்த்தைகளால் திட்டிய நபர் கைது

குவைத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கிப் பயணித்த விமானமொன்றில் சேவையாற்றிய பணிப்பெண் ஒருவரை தகாத வார்த்தைகளால் திட்டியதாகக் கூறப்படும் பயணி ஒருவர் கைது செய்யப்பட்டு கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குவைத்திலிருந்துகட்டுநாயக்கவிமானநிலையத்தை நோக்கிப் பயணித்த ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் விமானச்சேவைக்குச்சொந்தமான யு.எல்.- 230 என்ற விமானத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவர் ஹொரணை பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய நபரொருவராவார்.

சந்தேக நபர் குறித்த விமானத்தில் பயணித்துக் கொண்டிருக்கும் போது அதே விமானத்தில் சேவையாற்றிய பணிப்பெண் ஒருவரின் கையை இறுக்கிப் பிடித்து அவரை தகாத வார்த்தைகளால் திட்டியுள்ளார்.

இதனையடுத்து, பாதிக்கப்பட்ட பணிப்பெண் இது தொடர்பில்விமானக்குழுவிடம்தகவல்வழங்கியுள்ளார்.

பின்னர், விமானக் குழு இது தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் தகவல் வழங்கியதையடுத்து சந்தேக நபர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து திடீரென மாரடைப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, சந்தேக நபர் நீர்கொழும்பு பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் மனைவி இது தொடர்பில் தெரிவிக்கையில் -

எனது கணவர் கடந்த 14 ஆண்டுகளாக குவைத்தில் பணிபுரிந்து வந்த நிலையில் மாரடைப்பு நோய்க்கு சிகிச்சைப் பெறுவதற்காக மீண்டும் நாட்டுக்கு திரும்பினார்.

சம்பவத்தன்றுவிமானக்குழுவினர்எனதுகணவரை பலமாக தாக்கியுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் மற்றும் நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# மொனராகலை பொது வைத்தியசாலை மேற்கூரை உடைந்து வீழ்ந்து பரபரப்பு

## நோயாளர்கள் வெளியேற்றம்

மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் புதிய அடுக்குமாடி கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் போது சிறுவர் பிரிவுக் கட்டடத்தின் மேற்கூரை உடைந்து வீழ்ந்ததால் அப்பிரிவில் இருந்த பல குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை இடம்பெற்றுள்ளது.

வைத்தியசாலையின்புதியஅடுக்குமாடிகட்டடத்துக்கு இயந்திரம் மூலம் கொங்கிரீட் இட முயற்சித்தபோது கட்டுமான கட்டடத்தை ஒட்டியுள்ள சிறுவர் பிரிவுக் கட்டடத்தின் மேற்கூரையின் மீது கொங்கிரீட் தூண்கள் வீழ்ந்ததால், சிறுவர் பிரிவுக் கட்டடத்தின் மேற்கூரை திடீரென உடைந்து வீழ்ந்துள்ளது.

இதன் போது அங்கிருந்த பல குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் மீது மேற்கூரை உடைந்தது வீழ்ந்துள்ளன.

இதன் காரணமாக மூன்று தாய்மார்கள் மற்றும் மூன்று குழந்தைகள் மருத்துவ பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த பிரிவில் உள்ள அனைத்துக் குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தின் போது, எவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(05)



## உண்மை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணையத்தளம் செயற்படும் என ஆளும்தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

1983 முதல் 2009 வரை வடக்கு கிழக்கில் இடம்பெற்ற மோதல் நிலைமைகள் தொடர்பில் நிலைமாறுகால நீதியை செயற்ப டுத்தல் மற்றும் அதன்போதான நீண்டகால பாதிப்புக்களுக்கு தீர்வு களை வலியுறுத்தும் அறிக்கை யும் இணையபக்கத்தில் பதிவிடப்பட் டுள்ளது.

இந்த விடயங்களை வர்த்தமா னியில் அறிவித்து நாடாளுமன்றத்தில் சமர்பிக்கும் முன்னர் அது குறித்து சகலதரப்பினரதும் இணக்கப்பாடுகள் மற்றும் திருத்தங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள் உள்ளிட்ட சமூகத்தில் பல்வேறு அமைப்புக்களிடமிருந்த பெறப்பட்ட மற்றும் சர்வதேச பிரதிநிதிகளின் பல்வேறுபட்ட கருத்துக்களும் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் பிரதான பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கத்துடன் பாதிக்கப்பட்ட அனைத்து சமூகங்களுக்கும் தேவையான ஆதரவை வழங்கக் கூடிய சூழலை ஏற்படுத்தும் நோக்கில் உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் செயல்பட்டு வருகிறது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

## புத்தளம் பிரதேச கலா ஓயா ஆற்றில் குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

புத்தளம் வண்ணாத்திவில்லு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வில்பத்து தேசிய சரணாலயத்திற்கு முன்னால் உள்ள கலா ஓயா ஆற்றிற்கு குழிக்கச் சென்ற ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை மாலை சடலாக மீட்கப்பட்டவர் உட்பட நால்வர் குளிப்பதற்கு கலா ஓயா ஆற்றிற்கு சென்றிருந்த நிலையில், அவர்கள் அளவுக்கு அதிகமாக மது அருந்தியுள்ளார்கள்.

இதன்போது அங்கு இவர்களுக்கும் மற்றுமொரு குழுவினருடன் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, சடலமாக மீட்கப்பட்டவர் தவிர்ந்த ஏனைய குழுவினர் அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்ற நிலையில், இரண்டு மணித்தியாலங்களின் பின்னர், தப்பிச்சென்ற குழுவினர் சடலமாக மீட்கப்பட்டவரைத் தேடி மீண்டும் கலா ஓயா ஆற்றிற்கு வருகைத் தந்துள்ளனர். சடலமாக மீட்கப்பட்டவர் அங்கு காணப்படவில்லை.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்நிலையில், திங்கட்கிழமை காலை பொலிஸார் மற்றும், உயிரிழந்தவரின் நண்பர்களும் கலா ஓயாவின் இருபுறத்திலும் தேடியுள்ளனர். இதன்போது கலா ஓயா ஆற்றில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் வந்தனாகம, கலங்குட்டிய, கல்நேவ பகுதியைச் சேர்ந்த 47 வயததுடைய திருமணமாகாதவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு புத்தளம் நீதிமன்ற பதில் நீதவான் வசீம் ராஜா வருகைத் தந்து சடலத்தை பார்வையிட்ட பின்னர் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு சடலத்தைக் கொண்டு செல்ல உத்தரவிட்டார்.

குறித்த சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை களை மேற்கொண்டு வருவதாக வண்ணாத் திவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.(05)

## ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கொழும்பில் கைது

கொழும்பு, கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சேதவத்தை பகுதியில் ஐஸ் போதைப் பொருள் மற்றும் பணத்துடன் சந்தேக நபரொருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு, வெல்லம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 60 வயதுடைய நபரொருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 426 கிராம் 700 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் மற்றும் போதைப் பொருள் விற்பனை மூலம் சம்பாதித்ததாகக் கூறப்படும் ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபா பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (05)



## சொகுசு பஸ் - மோ.சைக்கிள் மோதி விபத்து; பெண் இறப்பு





அநுராதபுரம், நொச்சியாகம நகரத்தில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பற்ற முறையில் பயணித்த சொகுசு பஸ் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தவிபத்தின்போது, மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.(05)

## சுற்றுலாப் பயணிகள் மீது திருமலையில் தாக்குதல்

### மூவர் கைது

திருகோணமலை, குச்சவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறாமலை தீவுக்கு செல்லும் உள்ளூர் பயணிகள்மீது தாக்குதல் நடத்திய படகு சேவை உரிமையாளர்கள் மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தெஹிவளை பகுதியில் இருந்து புறா தீவுக்கு சென்ற சுற்றுலாப் பயணிகள் மீது தாக்குதல் நடத்திய 60, 40 மற்றும் 45 வயது படகு உரிமையாளர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் சுற்றுலா பயணி ஒருவர் காயமடைந்து நிலாவளி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்ற பின் வீடு திரும்பி உள்ளார்.

இச்சம்பவம் கடந்த 27 ஆம் திகதி மாலை இடம்பெற்றுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களை 29 ஆம் திகதி காலை திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதாகவும் ஆஜர் படுத்தியவர்களில் ஒருவர் கடுமையான இருதய நோயாளி என தெரிவித்தது அவருக்கு சரீர பிணை வழங்கப்பட்டுள்ளதுடன், மற்றும் இருவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார். (05)

## எட்டம்பிட்டியப் பகுதியில் 12 பேர் மீது குளவிக்கொட்டு

பதுளை, எட்டம்பிட்டிய பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்காகி 12 பேர் எட்டம்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

குறித்த சம்பவம் திங்கட்கிழமை மாலை இடம் பெற்றுள்ளது

4 ஆண்களும் 8 பெண்களும் குளவி கொட்டுக்கு இலக்காகி எட்டம்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் .

குளவி கூட்டின் மீது கழுகு தாக்கியதாகவும் அதன் பின்னர் குளவிகள் கலைந்து மனிதர்களை தாக்கியதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (05)



# தமிழ் மக்களின் நலன்சார்ந்தே ஈ.பி.டி.பி. முடிவுகளை எடுக்கும்

## எவரது முகவராகவும் செயற்படாதாம்



நாம் யாருக்கும் முகவர்களாகவோ, சுயநலத்துக்காகவோ சோரம்போனதில்லை. ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனித்துவமான செயற்பாட்டைக் கொண்ட கட்சியாகும் என கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போது ஊடகவியலாளர் நடைபேறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் சிறீலங்கா பொதுஜனபெரமுனவேட்பாளரைகளமிறக்கவுள்ளதால் தங்களது கட்சியின் தங்களது நிலைப்பாடு என்ன என எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி' என்ற அரசியல்இலக்குடன்இணக்கஅரசியலினூடாகடக்ளஸ் தேவானந்தா அமைச்சராக மக்கள் சேவையாற்றி வருகின்றார். அவர் 30 ஆண்டுகாலமாக தொடர்ச்சியாக நாடாளுமன்றில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டு அங்கம் வகித்துவருகின்றார்.

இதில் ஜனாதிபதிகளான சந்திரிகா அம்மையாரது ஆட்சிக்காலத்திலும், அதன்பின்னர் மஹிந்த ராஜபக்ஷவின்ஆட்சிக்காலத்திலும்பின்னர்கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்திலும் தற்போது ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக்காலத்திலும் அமைச்சராகவே இருக்கின்றார்.

தமிழ் மக்களின் அன்றாடப்பிரச்சினை அபிவிருத்தி அரசியலுரிமை ஆகியவற்றை நோக்காகக் கொண்டு ஈ.பிடி.பி தனித்துவமான முடிவுகளை மக்கள் நலன்சார்ந்து தேர்ந்தெடுத்து தனது அரசியல் வழிகாட்டல்களை மக்களுக்கு வழங்கிவருகின்றது.

இத்தேர்தலில் தென்னிலங்கையை சேர்ந்த பல ஜனாதிபதி வேட்பாளர்கள் களத்தில் போட்டியிட்டாலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிப்பதில் வெளிப்படையாகவே அறிவித்துள்ளது.

எனவே ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தமிழ் மக்களின் நலன்சார்ந்து முடிவுகளை எடுக்குமே தவிர, எவரது முகவர்களாகவும் செயற்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(05)

# தென்கொரிய அரச ஊழியர்கள் 37 பேர் இலங்கை வந்தனர்




தென்கொரியாவிலுள்ள அரச ஊழியர்கள்37பேர்கொண்டகுழுவினர் இலங்கைக்கு 7 நாள் விஜயம் மேற்கொண்டு திங்கட்கிழமை மாலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அனுராதபுரம், மிஹிந்தலை, சீகிரியா, பொலன்னறுவை, தம்புள்ளை, மாத்தளைஅலுவிஹாரை, கண்டிதலதா மாளிகை போன்ற பிரதேசங்களுக்கு தென்கொரிய அரச ஊழிய அதிகாரிகள் குழு விஜயம் செய்யவுள்ளனர்.

மேலும், நுவரெலியா தேயிலை தொழிற்சாலை, பின்னவல யானைகள் சரணாலயம் மற்றும் தேசிய அருங்காட்சியகம்மற்றும்அலுஹங்கல்ல கடற்கரை ஆகியவற்றையும் பார்வையிடப்படவுள்ளனர். (05)

# போதிய உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு இல்லாமல் மக்களின் உடல் பருமன் அதிகரிப்பு

போதிய உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு இன்மையால் நாட்டில் பெண்கள் மற்றும் ஆண்கள் மத்தியில் அதிக எடை மற்றும் உடல் பருமன் விகிதம் வேகமாக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற மருத்துவ முகாம் ஒன்றில் உரையாற்றிய அவர் -


நாட்டில் சுமார் 48 சதவீதமான பெண்கள் அதிக எடையுடனும், 33.3 சதவீதமான ஆண்கள் தங்கள் ஆரோக்கியமான எடையை விட அதிக எடையுடனும் உள்ளார்கள்.

சர்க்கரை, கொழுப்பு மற்றும் உப்பு அதிகமாக உட்கொள்ளும் போது உடற்பயிற்சி செயற்பாடு குறைவாக உள்ளது. அத்துடன், அத்தியாவசிய காய்கறிகள் மற்றும் பழங்கள் உட்கொள்ளல் குறைந்துள்ளது.

பெரும்பாலான மக்கள் தங்கள் நோய்களைப்பற்றி அறிந்திருக்கவில்லை. அதிக எண்ணிக்கையிலான மக்கள் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர். நாட்டின் முதியவர்களில் 42 சதவீதமானவர்கள் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் குறிபிட்டுள்ளார்.

(05)

# முட்டை இறக்குமதிக்கு அமைச்சரவை அங்கீகாரம்




அமைச்சரவையில் கடந்த மார்ச் 18ஆம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம், இலங்கை அரச வர்த்தக (பலநோக்கு) கூட்டுத்தாபனத்தால் இதுவரைக்கும் 224 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் 95 சதவீதமானவை வீதமானவைலங்காசதொசவிற்பனை வலையமைப்பின் மூலம் 37 ரூபாவுக்கு நுகர்வோருக்கு விநியோகித்துள்ளதுடன், முட்டை இறக்குமதிக்காகவழங்கப்பட்டுள்ளகாலப்பகுதிகடந்த ஏப்ரல் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும்ரமழான்மற்றும் நத்தார் கொண்டாட்டக் காலங்களில் சந்தையில் முட்டை விலையை நிலைப்படுத்துவதற்காகவும், மற்றும் கேக் உள்ளிட்ட வெதுப்பக உற்பத்திகளுக்குத் தேவையான முட்டைகளை விநியோகிப்பதற்குத் தேவைஷ்யான முட்டைத்தொகையை இறக்குமதி செய்வதற்காக வர்த்தக, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.(05)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் குளத்து மீன்பிடி அதிகரிப்பு





மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துள்ள கடுமையான வறட்சி காரணமாக குளத்து மீன்பிடி அதிகரித்துள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

குளங்களில் உற்பத்தியாகும் பனையான், குறட்டை, விரால், செத்தல், செல்வன் போன்ற மீனினங்கள் மீனவர்களின் வலைகளில் பெரிதும் பிடிபடுவதாக தெரிவிக்கப்படுகிறது .

குளங்கள் வற்றி வருவதால் குளத்தில் உற்பத்தியாகும் குறித்த மீன்களை மிக இலகுவாக கரைகளில்இருந்தேபிடிக்கக்கூடியதாகஇருப்பதாகவும் மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தில் விவசாய பிரதேசங்களான கொக்கட்டிச்சோலை, வாகரை, வவுணதீவு, வெல்லாவெளி உட்பட பல பிரதேச செயலகப் பிரிவுகளில் இவ்வாறு நன்னீர் மீன்பிடித் தொழில் அதிகரித்திருக்கிறது.

இதனால் பாதையோரங்களில் பயணிப்போர்களுக்கு நன்னீர் மீன்பிடியாளர்கள் மீன்களை விற்பனை செய்வதன் ஊடாக பெரும் இலாபத்தை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.(05)

# அளுத்கம – மத்துகம வீதியில் லொறி மோதி பெண் இறப்பு

வெலிப்பன்னை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அளுத்கம - மத்துகம வீதியில் லேவன்துவ சந்தியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வெலிப்பன்னை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மத்துகமையிலிருந்து அளுத்கம நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்த பெண் ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது படுகாயமடைந்த பெண், வேத்தேவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக களுத்துறை நாகொடை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர்உயிரிழந்துள்ளதாகபொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறை , பதுரலிய பகுதியில் வசிக்கும் 62 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து, லொறியின் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகபொலிஸார்தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிப்பன்னை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# கிண்ணியாவில் குளவிக்கொட்டு மாணவர்கள் வைத்தியசாலையில்

கிண்ணியாவில்நேற்று(செவ்வாய்க்கிழமை) குளவி கொட்டுக்கு இலக்காகிய மாணவர்கள் கிண்ணியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைக்கு உட்பட்டு வருகின்றனர்.

அவர்களை கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.முஹம்மது கனி நேரடியாக சென்று பார்வையிட்டார்.

குளவி கொட்டுக்கு இலக்காகிய 40 மேற்பட்ட மாணவர்கள் கிண்ணியா தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு படிப்படியாக சிகிச்சை பெற்று வெளியாகி வருகின்றதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 31.07.2024இல் வெளியிடப்பெற்றது